# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 07.01.2025 |
| Case No. | : O.S. 4/2019 | Nationality | : Indian |
| Name | : லோகநாதன் | Religion | : |
| Father's/Husband's Name | : சாரங்கபாணி | Age | : 55 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் நீதிமன்றத்தில் 24.07.2006 தேதியிட்ட கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்து கொள்ளலாமா என்றால் கொள்ளலாம். ( 24.07.2006 தேதியிட்ட கிரய ஆவணம் அசல் **வா.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) . மேற்படி ஆவணம் யாரால் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ராமநாதன் வகையறாவால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ராமநாதன் தனக்காகவும் இளவர் மகன் சுமார் 10 வயதுள்ள சோமசுந்தரம், இளவர் மகள் சுமார் 17 வயதுள்ள சரண்யா ஆகியோருக்கும் காப்பாளர் என்ற முறையிலும் மேற்படி ஆவணத்தை எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்தின் நான்கெல்லைகள் என்னவென்றால் தங்களுக்கு சொந்தமான நஞ்சைக்கு கிழக்கு, நடப்பு கரை திடலுக்கும் தெற்கு, ராஜேந்திரன் சாகுபடி செய்துவரும் நஞ்சைக்கு மேற்கு, சாமிநாதன், அருணாச்சலம் ஆகியோர் சாகுபடி செய்து வரும் நஞ்சைக்கு வடக்கு இதற்குட்பட்ட நஞ்சை நிலமாகும். மேற்படி கிழக்கு

நான்கெல்லையில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜேந்திரன்தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த நான்கெல்லையில் தாவா சொத்து உள்ளது என்றால் கிழக்கு பக்கத்திலும் வடக்கு பக்கத்திலும் உள்ளது. ஏற்கனவே எனது சாட்சியத்தில் குறுக்கு விசாரணையில் சொத்து சாகுபடி செய்வது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சான்று சம்மந்தமாக கும்பகோணம் வருவாய்கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் அந்த சான்றிதழை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் நான் தரப்பினர் அல்ல.

2. மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவினை ஆட்சேபித்து யார் மேல்முறையீடு செய்தது என்றால் நான் தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தேன். அந்த மேல்முறையீட்டில் என்ன உத்தரவானது என்றால் அதில் எனக்கு விரோதமாக உத்தரவானது. அந்த உத்த்ரவினை ஆட்சேபித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)No.552/2002 என நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனுவில் 05.02.2019 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விசாரணை நீதிமன்றத்தில் ஆவணம் தொடர்பாக சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கப்பட்டு மனு முடித்து வைக்கப்பட்டது. மேற்படி உத்தரவு வாசாஆ 9 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனுவில் ஏற்பட்ட உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.07 18:08:07 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.